# செய்யுள் - காசிக்காண்டம்

1. விருந்தோம்பல் செய்யும் இல்லற ஒழுக்கமாக காசிக் காண்டம் பாடல் வழி விளக்குக: (அல்லது)
   விருந்தோம்பும் நெறியாக அதிவீரராம பாண்டியர் கூறும் கருத்துகளை எழுதுக:

விருந்தினராக ஒருவர் வந்தால் அவரை,

- வியந்து உரைத்தல்.
- நல்ல சொற்களை இனிமையாகப் பேசுதல்.
- முகமலர்ச்சியுடன் விருந்தினரை நோக்குதல்.
- வீட்டிற்குள் வருக என்று வரவேற்றல்.
- விருந்தினரின் எதிரில் நிற்றல்.
- விருந்தினருடன் மனம் மகிழும்படி பேசுதல்.
- விருந்தினர் அருகிலேயே அமர்ந்து கொள்ளுதல்.
- விருந்தினர் விடைபெற்றுச் செல்லும் போது வாயில் வரை பின் தொடர்ந்து செல்லல்.
- விருந்தினருடன் புகழ்ச்சியாக முகமன் கூறி வழியனுப்புதல்

ஆகிய ஒன்பதும் விருந்தோம்பல் செய்யும் இல்லற ஒழுக்கமாகும்.

2. காசிக்காண்டம் - நூல் குறிப்பு மற்றும் அதிவீரராம பாண்டியர் - ஆசிரியர் குறிப்பு எழுதுக:

காசிக்காண்டம் - நூல் குறிப்பு:

- காசி நகரத்தின் பெருமைகளைக் கூறும் நூல்.
- நூலின் கருத்துகள் – துறவு, இல்லறம், பெண்களுக்குரிய பண்புகள், வாழ்வியல் நெறிகள், மறுவாழ்வில் அடையும் நன்மைகள்.
- பாடப்பகுதி – 'இல்லொழுக்கங் கூறிய' பகுதியில் 17 ஆம் பாடல்.

அதிவீரராம பாண்டியர்:

- பெயர்: அதிவீரராம பாண்டியர்
- சிறப்பு: முத்து குளிக்கும் கொற்கையின் அரசர்
- பட்டப்பெயர்: சீவலமாறன்
- படைப்புகள்: காசிக்காண்டம், நைடதம், லிங்கபுராணம், வாயுசம்கிதை, திருக்கருவை அந்தாதி, கூர்ம புராணம், வெற்றி வேற்கை